நாள் 08.04.2025

O.S.No. 101/2017 DW1 Name திரு. சந்தான கிருஷ்ணன்.

4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பிலான குறுக்குவிசாரணை

நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதியாவேன். 2, 3 பிரதிவாதிகள் என் மகன்களாவர். 2, 3 பிரதிவாதிகளுக்காக இவ்வழக்கை நான் நடத்தி வருகிறேன். தாவா சொத்துக்கள் ஆதியில் கிருஷ்ணசாமி நாயுடு அவரது மனைவியான நாராயணம்மாள் ஆகியோருக்கு பாத்தியப்பட்டதென்றால் சரிதான். அவர்களின் இறப்பிற்கு பின்னிட்டு அவர்களின் வாரிசுகளான சங்கிலி நாயுடு,. சுந்தர்ராஜ நாயுடு, மற்றும் எனது தந்தை ஜெயராமன் நாயுடு ஆகியோருக்கு பாத்தியப்பட்டதென்றால் சரிதான். சங்கிலி நாயுடு என்பவர் 1951ம் வருடம் எந்தவிதமான வாரிசும் இல்லாமல் இறந்துவிட்டாரென்றால் சரிதான். சங்கிலி நாயுடுவிற்கு பாத்தியப்பட்ட சொத்தை சுந்தராஜ நாயுடு, கோவிந்தராஜ நாயுடு என் தந்தை ஜெயராம நாயுடு ஆகியோர் கூட்டாக அனுபவம் செய்து வந்தனர் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை எங்களுடைய தகப்பனார்கள் உயிருடன் இருக்கும் காலத்திலேயே வாய்மொழியாக பிரித்துக் கொள்ளவில்லை என்றும், வாய் மொழியாக பிரித்துக் கொண்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. கிருஷ்ணசாமி நாயுடு உயிருடன் இருந்த காலத்திலேயே 28.02.1954 அன்று பதிவு செய்யப்படாத உயில் ஒன்றை எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி உயில் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆன உயிலானது நி'ரூபணம் செய்யும் பட்சத்தில் இவ்வழக்கில் 1 முதல் 3 … . ..

**பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களில் 1/3 பாகம் கிடைக்கும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.**

**மறுவிசாரணை இல்லை.**

**7 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளனர்.**

**வேண்டுகோளின்பேரில் வாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒப்பம் - சந்தானகிருஷ்ணன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

ஒப்பம் - என். நாகலெட்சுமி.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி (மு.கூ.பொ),

மதுரை.